# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in


**Lr. No.TNTEU/R/**Bio-Chemistry**/2018-19/** 2444 **Date: 29.10.2018**

## சுற்றறிக்கை

பொருள்: **B.Ed** சேர்க்கை 2018-2019 – B.Sc Bio-Chemistry படிப்பு, B.Sc Chemistry படிப்புக்கு சமமானதல்ல - Bio-Chemistry படித்த மாணவர்களுக்கு B.Ed சேர்க்கை நிராகரித்தல் – விவரங்கள் அளித்தல் - தொடர்பாக.

*****

சமீபத்தில் நிறைவுற்ற 2018-2019-ஆம் கல்வியாண்டுக்கான பி.எட் சேர்க்கையில், பி.எஸ்சி உயிரின வேதியலில் பட்டபடிப்பு (B.Sc. Bio-Chemistry) படித்த மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பி.எட் சேர்க்கையை கீழ்க்கண்ட அரசு ஆணைகளின் அடிப்படையில் இப்பல்கலைக்கழகம் நிராகரித்துள்ளது.

1. G.O.(1D) No.158, Higher Education (G1) Department, dated 11.05.2017
2. G.O.(Ms) No.72, Higher Education (K2) Department, dated 30.04.2013
3. Advertisement No. 02 /2017, dated 27.04.2017 of the Teacher Recruitment Board, Chennai – 600 006.

- மேற்கண்ட 11.05.2017 நாளிட்ட அரசாணையின்படி, நடப்பு 2018-2019 கல்வியாண்டுக்கான பி.எட் சேர்க்கை நடைபெற்றது. அதில், பக்கம் 3, பத்தி II(viii)(c)-ல் Applied Chemistry மட்டுமே Chemistry க்கு இணையாக கருதி மாணவர்களை Physical Science பாடப்பிரிவில் பி.எட்-ல் சேர்க்கை செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மற்ற வேறு எந்தப்பிரிவுகளும் Chemistryக்கு இணையாகக் கருதி சேர்க்கை செய்யுமாறு ஆணை எதுவும் இல்லை. எனவே பல்கலைக்கழகம் பி.எட் சேர்க்கைக்கு Bio-Chemistry படிப்பை நிராகரித்துள்ளது.

- 30.04.2013 நாளிட்ட அரசாணையில், வரிசை எண் 1 மற்றும் 15-ல், B.Sc Bio-Chemistry மற்றும் M.Sc Bio-Chemistry பட்டப்படிப்புகள் முறையே B.Sc Chemistry மற்றும் M.Sc Chemistry படிப்புக்கு இணையானதல்ல என அரசு ஆணையிட்டுள்ளது. எனவே பல்கலைக்கழகம், பி.எட் சேர்க்கைக்கு Bio-Chemistry படிப்பை நிராகரித்துள்ளது.

- சென்னை ஆசிரியர் தேர்வு வாரியம், 27.04.2017 அன்று வெளியிட்ட பள்ளி ஆசிரியர்கள் நியமனத்திற்கான அறிவிப்பில், Chemistry பாடத்திற்கான பள்ளி ஆசிரியர் நியமனத்திற்கு, Chemistry அல்லது அதற்கு சமமான படிப்பு படித்தவர்கள் மட்டுமே தகுதியானவர்கள் என தெரிவித்துள்ளது. Bio- Chemistry படிப்பானது Chemistry க்கு சமமானதல்ல என்பதால், Bio-Chemistry படித்தவர்களுக்கு அரசு பள்ளிகளில் வேலை வாய்ப்பு இல்லை என்ற நிலை உள்ளதால், பல்கலைக்கழகம், பி.எட் சேர்க்கைக்கு Bio-Chemistry படிப்பை நிராகரித்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் மேற்கண்ட நடவடிக்கை தொடர்பாக, சிலர் பாரதியார் பல்கலைக்கழத்தின் கோரிக்கையின் பேரில் அரசு பிறப்பித்த அரசு ஆணை நிலை எண்: 254, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 22.10.1998-ஐ மேற்கோள் காட்டி, பல்கலைக்கழகம் செய்த சேர்க்கை நிராகரிப்பை, மறுபரிசீலனை செய்யுமாறு கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையானது, கீழ்க்கண்ட காரணங்களால் பல்கலைக்கழகத்தால் ஏற்க இயலவில்லை. அதன் விவரங்கள் வருமாறு.

- அரசாணை எண் 254-ல் பாரதியார் பல்கலைக்கழக வேண்டுகோளின் அடிப்படையில், உயிரின வேதியல் பட்டப்படிப்பு, வேதியல் பட்டப் படிப்புக்கு சமம் என ஆணையிடப்பட்டது.

- ஆனால், அதற்குப் பின்பு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளின் அடிப்படையில், அரசாணை எண்: 24, (P&AR), நாள் 04.02.2011 பிறப்பித்து கீழ்க்கண்ட உத்தரவை அரசு வழங்கியுள்ளது.

  *"…. accordingly direct that the degree B.Sc (Bio-Chemistry) awarded by all Universities in the State recognised by the University Grants Commission is not equivalent to the degree of B.Sc (Chemistry) ……"*

- மேலும், அரசாணை எண்: 72, Higher Education (K2) Department, dated 30.04.2013-ன் மூலம் Bio-Chemistry யானது Chemistry க்கு சமமானதல்ல என்று இறுதியாக அரசு ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், சிலர் சென்னை உயர்நீதிமன்றம், W.P.No.25718/2012 என்ற வழக்கில் 01.03.2018 அன்று வழங்கிய தீர்ப்பை மேற்கோள் காட்டி, பல்கலைக்கழகம் மறுபரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளனர். இந்த ஆணையில், Bio-Chemistry யானது Chemistry க்கு சமம் என்று உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கவில்லை. எனவே, இந்த கோரிக்கையையும் எடுத்துக்கொள்ள இயலவில்லை.

மேலே விவரிக்கப்பட்டவாறு, Bio-Chemistry படிப்பானது Chemistry க்கு சமமான படிப்பு அல்ல என்பதால், Bio-Chemistry படித்தவர்களை Chemistry-க்கு சமமாகக் கருதி, பி.எட் பட்டப்படிப்பில் சேர்க்கைச் செய்யக்கூடாது என்று பல்கலை இணைவுபெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகளின் நிர்வாகங்களை இச்சுற்றறிக்கையின் வாயிலாக இப்பல்கலைக்கழகம் கேட்டுக்கொள்வதோடு, அவ்வாறு தவறாக சேர்க்கை செய்து அதனால் மாணவர்களுக்கு இழப்புகள் ஏற்படுமாயின், அதற்கு, சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகங்களே பொறுப்பாகும் என்றும், இப்பல்கலைக்கழகம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளலாகிறது.

29/10/18

பதிவாளர் (பொ)

பெறுநர்கள்:
செயலாளர்கள் / முதல்வர்கள்,
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்வியியல் கல்லூரிகள்.